# ஆத்மஜோதி



குன்றக்குடி திருப்பெருந்திரு

அருணாசல தேசிக சுவாமிகள்

ஓம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக வெளியீடு

எல்லாஉலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே — சுத்தானந்தர்

சோதி 5 | விஜய வருடம் ஆனி மாசம் திகதி 1 | சுடர் 8

## பொருளடக்கம்


| | |
|---|---|
| வாழ்த்து | 197 |
| குன்றக்குடி அடிகளாரின் செய்தி | 198 |
| மாதுசிரோமணி | 200 |
| தெய்வநினைவு | 205 |
| அருட்பாவிளக்கம் | 206 |
| உபதேசமணிகள் | 210 |
| நல்ல...வன்மை சேரவேண்டும் | 217 |
| குருசந்நிதானம் வாழ்க | 219 |
| அர்ச்சனைமாலை | 221 |
| செய்தித்திரட்டு | — |



ஆத்ம ஜோதி

✻ ஆயுள்சந்தா ரூபா 75/- ✻ வருடசந்தா ரூபா 3/

ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி (இலங்கை)

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்

நம் 60 மல் பிளேஸ் கொள்ளுப்பிட்டி, கொழும்பு

பதிப்பாசிரியர்: நா. முத்தையா

ஆத்மஜோதிநிலையம் நாவலப்பிட்டி.


# வாழ்த்து

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க என்றும் வாழ்கவே!

கண்டோர் வினையைக் களைந்து நிற்கும்
கடவுண் மலையின் காமத்தைக்
கொண்டே வந்து காட்சி தந்த
குரவன் பாதம் வாழ்கவே! [வாழ்க]

அண்ணு மலையில் அறிஞர் கண்ட
ஆதீ னத்தின் தலைவராய்
தொண்டே யுருவாய்த் தோன்றி வாழும்
தூயன் நாமம் வாழ்கவே! [வாழ்க]

தமிழின் பழமை தமிழர் பண்பு
தனை யுரைப்போன் வாழ்கவே!
தமிழ்நா டுய்யத் தவமேற் கொண்ட
தலைவன் நாமம் வாழ்கவே! [வாழ்க]

அன்பும் அருளும் அறமும் விளக்கும்
ஆசான் பாதம் வாழ்கவே!
இன்ப மடைதற் கிவையே துணையென்
றெடுத் துரைப்போன் வாழ்கவே! [வாழ்க]

குன்றக் குடியாங் குமான் தலத்தில்
குருபீ டத்திற் கணி செய்தே
தொன்மை யான சைவ நெறியைத்
துலக்க வந்தோன் வாழ்கவே!

(குன்றக்குடி அடிகளார் இலங்கையை விட்டுப் பிரயாணமாகும் போது
ரத்மலானை விமான நிலயத்தில் பாடப்பட்டவை.)

# 'ஆத்மஜோதி'க்கு

குன்றக்குடி அடிகளாரின்

## செய்தி

வாழ்க்கை வாழ்வதற்கே ஏற்பட்டது. வாழ்க்கையின் பயன் இந்த உலகியலோடு அமைவதில்லை: இம்மை மறுமை இரண்டிலும் இறவாத இன்ப அன்பைக் காண்பதுதான் வாழ்க்கையின் இலட்சியம். இந்த இலட்சியத்தை நோக்கி நாம் செய்கின்றபிரயாணத்தில் தலையிட்டுத் தடை செய்வது இருள். இருளை நீக்கி ஒளியைக் கண்டால்தான் இன்பந் தோன்றமுடியும். இருளிற்குச் சார்பு அகந்தை; அகந்தையுடையசார்பில் தோன்றுபவைதான் சாதிப்பிணக்கும், உயர்வு தாழ்வுப் போராட்டங்களுமாம்.

இத்தகைய தீய இயல்புகளை மாற்றி உளத்தில் தூய அன்பை வளர்ப்போமானால்அங்குஅருள் ஒளிஎழும்; அந்த ஒளியின் துணையால் நம்மையும் காண முடியும். உலகையும் காண முடியும், உவப்பிலா ஆனந்தத்தையும் காணமுடியும்; அதுவே ஆத்ம ஜோதி ஆத்மஜோதியால்தான் உலகம் வாழமுடியும்; ஆத்மஜோதியை வளர்ப்பதையே குறிக்கோளாகக்கொண்டு பணிசெய்து வருகின்ற நல்லன்பர் ராமசந்திரா அவர்களும் திரு முத்தையா அவர்களும் அவர்களுடைய "ஆத்மஜோதி"யும் வாழ்க!

வையம் வாழ்வதற்காக வாழ்க!

சைவம் வளர்த்த

# மாது சிரோமணி

—(ஆசிரியர்)—

(முற்றொடர்ச்சி)

சுரந்த திருமுலைக்கே துய்ய திருஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் — சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்தவாறு.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பன்னிருவர் குருவருளால் முத்திபெற்றவரென்பதையும், அப்பன்னிருவர் புராணங்களுள் குருபத்தியின் பெருமையைத் தனித்தனிச் சிறப்புகளுடன் விளக்குவது அப்பூதியடிகளாரும், மங்கையர்க்கரசியாரதும் வரலாறுகளென்பதையும் முன்னர் குறிப்பிட்டுள்ளோம்.

பாண்டி நாடு உய்ய சோழமன்னன் மகளாய்த் தோன்றிய மங்கையர்கரசி, எழுலகும் உய்ய அவதரித்த திருஞான சம்பந்தரின்மீது வைத்த குருபக்தி, அப்பெருமான் திருமறைக் காட்டில் எழுந்தருளியிருந்த செய்தியை அறிந்தபோது அரும்பியதாகும்: அச்செய்தியைக் கேட்டபோது அரசியார் உள்ளம் பக்தியில் உருகிய விதத்தைச் சேக்கிழார் பின் வருமாறு பாடுகிறார்,

கேட்டவப் பொழுதே சிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சி பொங்க
நாட்பொழு தலர்ந்த செந்தா மரைநகை முகத்த ராகி
வாட்படை யமைச்ச ருரு மங்கையர்க் கரசி யாருஞ்
சேட்படு புலத்தா ரேனுஞ் சென்றடி பணிந்தா ரொத்தார்

அதாவது இருவருக்குமிடையே நெடுந்தூரம் இருந்தும், நேரே சென்று திருவடி வணங்கியவரைப் போன்றவராயினர், இந்த இடத்தில் "அன்றுங் திருவுருவங் காணாதே ஆள்பட்டேன்" என்று தொடங்கும் அம்மையாரின் வாக்கை "அன்றும் திருவுருவம் காணாதே ஆள்பட்டேன்" என்று மாற்றியமைப்பின் அது அரசியாருள்ளக் கருத்தையும் விளக்குவதாகும்.



குருபத்தித் தொடர்பில் குருவை நேரிற் தரிசிக்காமல் அவர் பெயரைக் கேட்டமாத்திரத்திலே அல்லது அவர் உபதேசத்தைப் படித்த மாத்திரத்திலே அன்பு கொள்ளுந்தன்மை ஏழாம் நூற்றுண்டில் மட்டும் இருந்ததெனக் கொள்ளற்க. இருபதாம் நூற்றுண்டில் அவ்வித உணர்ச்சி உண்டென்பதற்கு காந்தி, ரமணர், அரவிந்தர், சிவானந்தர், இராமதாசர் முதலாய மகான்களுடன் அத்யாத்ம தொடர்பு பூண்ட பல மேல்நாட்டு அடியார்கள் வரலாற்றில் சான்றுகளுண்டு.

மேற்கூறியவாறு அரும்பிய அரசியாரின் குரு பக்தியானது சம்பந்தப்பெருமானை திருவாலவாயிலில் முதல் முதலாகத் தரிசித்து அடிபணிந்தபோது மலர்ச்சியுற்றதைக் காண்கிறோம். சம்பந்தப் பெருமான் எழுந்தருளியிருந்த திருமடத்தில் ஈனமே புரிய வல்ல வஞ்சின மனத்தாகிய சமணர் தீவைத்த செய்தியைக் கேட்டதும்,

"ஞான சம்பந்தர் தம்பால் நன்மையல்லாத செய்ய
ஊனம் வந்தடையின் யாமும் உயிர் துறந்தொழிவ தென்று"

அரசியார் அமைச்சருடன் கூடி உறுதிகொண்ட வேளையில் குரு பக்தி காயக்கும் பருவத்தைக் காண்கின்றோம் சமணர்களால் மடத்தில் வைக்கப்பட்ட தீ வெப்ப நோயாகிப் பாண்டியனைப் பற்றியது. அந்நோய் சமணரால் தீர்க்கமுடியாமை கண்டு அரசர் வருந்த, அவரின் உத்தரவுடன் சம்பந்தப் பெருமானை அரண்மனைக்கு அழைத்து வரச்சென்ற பாண்டிமாதேவியார் அவரது பாததாமரைகளில் விழுந்து அடைக்கலம்! என்று அவரது திருவடிகளைப் பற்றிக்கொண்ட சந்தர்ப்பத்தில் அன்னாரின் குருபக்திகனியும் காட்சி தென்படுகின்றது. இதனை விபரிக்கும் சேக்கிழார் பாடல் எத்தனைமுறை கேட்டாலும்தெவிட்டாது இன்பமளிக்குந் தரத்தது. அதனை இங்குவாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்:

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

அடியாள் குருவின் பாதத்து அடைக்கலம் புகுந்த வரலாற்றையும் தொண்டர் சீர் பரவுவார் திருவாக்கிலேயே தருகின்றோம்

உரைகுழறி மெய்ந்நடுங்கி யொன்றுமறிந் திலராகித்
தரையின்மிசைப் புரண்டயர்ந்து சரணகம லம்பற்றிக்
கரையில்கவ லைக்கடற்கோர் கரைபற்றி னார்போன்று
விரைவுறுமெய் யன்பினால் விடாதொழிவார் தமைக்கண்டு.

மேல்விளக்கியவாறு குருநாதன் திருநாமத்தைக் கேட்டமாத்திரத்திலேயே அரும்பி அவர் திருமேனி தரிசனம் பெற்றதும் மலர்ந்து தந்நகரில் சமணரால் அவருக்கு ஏதாவது தீங்கு நேரின் உயிரை விடவேண்டுமென்ற உறுதிப்பாட்டில் காய்த்து, குருநாதன் திருப்பாதங்களில் பூரண அடைக்கலம் புகுந்ததில் கனிந்த குருபக்தியானது அவரது பிரிவுக்கஞ்சி எவ்வாறு உருகியதென்பதையும் சிறிது ஆராய்வோம்.

உடலுக்குத் தந்தையாரான சிவபாத விருதயரின் மதுரை வருகையால், உயிருக்குத் தந்தையான தோணியப்பரின் நினைவு வரப்பெற்ற பிள்ளையார் "மண்ணினல்லவண்ணம் வாழலாம்வைகலும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி மதுரையைவிட்டுசெல்ல விருப்பங் கொண்டார். இதையறிந்த பாண்டிமா தேவியாரும்; மன்னரும அமைச்சரும் தமது ஊன் உருகும்படி மனமழிந்து கண்ணீர் இடையறாது பெருகிவீழ உணர்வுமயங்கிய நிலையில் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்தனர்: இதைக்கண்ட காழி வள்ளல் "யானுமைப்பிரியாத வண்ணமிந்நாட்டிறைவர்பதியெனைப் பலவும் பணிவீரென்று" அவர்களது வருத்தந்தவிர்த்து. திருப்பரங்குன்றம் முதலாய தலங்கட்கு அழைத்துச்சென்றனர். பிரிவாற்றாது வருந்தி வீழ்ந்த அடியார்களைநோக்கி "நீங்கள் என்னைப் பிரியாவண்ணம்" என்று அவர்கள்மேல் வைத்துக்கூறாது, யான் உம்மைப் பிரியாவண்ணம்" என்று தம்பால் வைத்து இன்மொழி கூறிய பிள்ளையாரின் பெருந்தன்மையையும சீடர்மீது அவர்வைத்துள்ள கருணையையும் வாசகர்கள் உற்றுநோக்குவார்களாக:

சம்பந்தப்பெருமானும் அடியார் குழாமும் குலச்சிறைநாயனாரது பிறப்பிடமாகிய மணமேற்குடியில் தங்கியிருந்துபாண்டிநாட்டுப்பதிகளின் யாத்திரையை முடித்து மதுரை திரும்பியபின்



மேலே எடுத்து விளக்கியது போன்ற இன்னுமோர் உருக்கமான காட்சியை சேக்கிழார் நமக்கு அளித்துள்ளார், அதனை விளக்கும் பாடல்கள் பின்வருமாறு:-

பொங்கு புனற் காவரி நாடதனின் மீண்டு
போதுதற்குத் திருவுள்ளமாகப் போற்று
மங்கையருக் கரசியார்தாமும் தென்னர்
மன்னவனு மந்திரியார் தாமுங்கூட
அங்கவர்தந் திருப்பாதம் பிரியலாற்றா
துடன்போக வொருப்படுமவ் வளவுநோக்கி
இங்குநான் மொழிந்ததனுக் கிசைந்தீராகில்
ஈசர்சிவ நெறிபோற்றி யிருப்பீரென்று

சாலமிகத் தளர்வாரை தளராவண்ணந்
தகுவனமற்றவர்க் கருளிச்செய்த பின்பு
மேலவர்தம் பணிமறுக்க வவருமஞ்சி
மீள்வதனுக் கிசைந்துதிரு வடியில் வீழ்ந்து
ஞாலமுய்ய வந்தருளும் பிள்ளையாரைப்
பிரியாத நண்பினொடுந் தொழுதுநின்றார்
சூலவிட முண்டவரை யடிகள் போற்ற
அந்நாட்டை யகன்றுமீண் டணையச்செல்வார்

இவ்விதம் சைவத்திற்கு உயர்வு தரும்முறையில் உன்னத நிலையடைந்திருந்த குருபக்தியானது பின்னாளில் அருகியதற்குக் காரணம், அறிவுச்சமயங்களால் ஏற்பட்ட உள்ள வறட்சியை நீக்கி அன்பை ஊற்றெடுத்து நாடெங்கும் பாவத் தொண்டாற்றிய சைவமே நாளடைவில் வெறுந்தத்துவ வாதமிடுஞ்சித்தாந்தமாகமாறிய முறையெனலாம். அன்புக்கு முதலிடங் கொடுக்கும் சாதனையற்ற சாத்திரப்படிப்பு சாரீரமற்ற சங்கீதம் போன்றதே இந்த உண்மைக்குச்சான்றுகள் உள. அவற்றுள் ஒப்பற்ற ஒன்றை மாத்திரம் இங்கு தருகிறோம். சைவசமயப் பண்டிதர் பலரால் தொகுக்கப்பட்ட மதுரைத்தமிழ்ப் பேரகராதியின் எழுநூற்று நாற்பத்தோராம் பக்கத்தைப் பாருங்கள். அங்கே "சித்தாந்த சாத்திரங்கள் 14" என்பதற்குத் தந்துள்ள விரிவான விளக்கம்,

"இந்தச் சித்தாந்த சாத்திரங்கள் தமிழிலே வெளிவருவதற்குமுன்னே பக்குவர்கள் குருவைத் தேடியடைந்து உபதேசமுகமாகச் சமயவுணர்ச்சியைப் பெற்றுக்கொள்வார்கள், இக்காலத்தில் நூல்களே எல்லார்க்கும் குருக்களாயின ஆகியும், உண்மையை அறியத் தலைப்பட்டார் மிகச் சிலரே. அக்காலத்தில் அறியாதார்பலர் இக்காலத்தில்அறிந்தும் அறியாதவர்கள்பலருள்ளார்கள்".

என்ற வசனத்துடன் முடிவடைகின்றது,

தமிழ்நாட்டின் இன்றைய சமயநிலை வருத்தத்திற்குரியதெனினும், எதிர்காலத்தைப்பற்றி யாம் அதிகம் கிலேசப்படவேண்டிய அவசியமில்லை. எந்நாட்டவர்க்கும் இறையாகிய சிவபெருமான் தென்னாட்டை எப்போதாவது முழுதும் கைவிட்டதாகச் சரித்திரம் கூறவில்லை. நமது சைவத்தின் காலசக்கரச் சுழற்சி மறுபடியும் மேல்நோக்கித் திரும்பும்வேளை அண்மையில் இருப்பதைக் காட்டும் அறிகுறிகள் தோன்றியுள்ளன. குன்றக்குடி மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணாசலதேசிகர் அவர்களின்ஆதரவுடன் நிறுவப்பட்ட அருள்நெறித்திருக்கூட்டம் காலதேவிவேண்டி நிற்கும் புதுமுறையில் அரியசமயப்பணியை ஆரம்பித்துள்ளது. அடிகளாரின் சமயப்பிரசாரம் சித்தாந்த சாத்திரத் தத்துவ விளக்கமாயமையாது அன்புநெறியைப் பற்றியிருப்பது போற்றதக்கதாகும். இலங்கையில் இருவாரங்கள் தங்கியபோது அவர்செய்த சொற்பொழிவுகள் எதிலாவது அன்பு, அருள், அறம் என்ற மூன்றும் இடம் பெறாமல் இருக்கவேயில்லை. தாய்நாடு திரும்புவதற்கு சில நிமிடங்களுக்கு முன் "வீரகேசரி" ஆசிரியர் உயர்திரு ஹரன் மூலம் இலங்கைமக்களுக்கு அடிகள் விடுத்த செய்தியை "இலங்கைவாழ் மக்கள் அனைவரும் அன்புபெருக்கி, அறம் வளர்த்து, இன்பத்தமிழையும் இறை நெறியையும் இமைபோல்பேணி காப்பார்களாக!" என்ற விண்ணப்பத்துடன் முடித்துள்ளார்.

அடிகளாரின் அறிவும் ஆற்றலும் அளப்பருந்தன்மைபொருந்தியனவ. காலத்தின் போக்கையும் மாந்தரின் மனப்போக்கையும் நன்குணர்ந்து, பக்குவமான விஷயங்களை எடுத்து எளிய நடையில் விளக்கி, கேட்போர் உளத்தைக் கவர்ந்து கொள்ளும்


217பக்கம்பார்க்க



# தெய்வ நினைவு

(அ: இராமசாமி ஜோகூர்பாரு மலாயா)

தாயே! ஆறறிவு படைத்த மனித ஜென்மத்தில் பிறந்தநான் நினைப்பது எதை? என்று ஆராய்ந்து பார்க்கின் உன்னையல்லால் இவ்வுலகில் வேறு ஒன்றுமில்லை, என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அறிகிறேன். தாயே! என்மனதை பரிசுத்தமாக்கினாய் இல்லாவிடில்உன்னைநினைப்பதற்கு என் மனதில் கிஞ்சித்தும் இடம் ஏது? பரிசுத்தமான இருதயக் கிணற்றில் உன் நினைவாகிய ஊற்றுக் கண் இன்ப நீரை நிறைவிக்கிறது.

இதனாலன்றோ பலாச்சுளையைக் கண்ட ஈ போல உன்னைவிட்டகல என் மனம் இசைவதில்லை. உன்னையே நினைக்க வேண்டுமென்று விரும்புகிற நான், என்னையறியாமலே மறந்து விடுகிறேன். இதற்குக் காரணம் இவ்வுலகீர்களிடையே நான் வாழுவதும்! உன் மாயா சக்தியின் லீலையுமாகும். தாயே! உன்னை நான் மறப்பதவும் உன் கிருபையினாற்றான், விளையாடும் குழந்தை வெகுநேரம் தாயை மறந்து, பின் நினைவு வந்ததும் அருமையாய் கட்டிய மண்வீட்டை அழித்து விட்டு வேகமாய் தாயிடம் ஓடுகிறது. ஆனால், நான் உன்னை மறந்து பின் நினைவுவரும் போது எனக்கு வரும்துன்பம் மிகப் பெரிதாகிறது. அந்தோ! என்ன பெரும் பிழைசெய்தோம் இவ்வளவு நேரம் தாயை மறந்திருந்தோமே! இந்தக்குற்றத்திற்கு எந்தத்தண்டனை ஈடாகும்? என்று மனம் துடிக்கிறது.எவ்வளவுநேரம் மறந்திருந்தேனோ? அதனினும் பெருமளவு மனம்பச்சாத்தாபப்படுகிறது. தாயே! அதிவேகமான உணர்ச்சியுடன் உன்னிடம் சரண்புக, மறதிதான் எனக்கு ஆக்கம் அளிக்கிறது. தாயே! பக்தர்களை பக்குவமாக்கும் உன்பெருமையை உள்ளவாறு உணர்ந்துஉன் திருவடித்தாமரையிலிருக்கும் தேனை அருந்த என் மனமாகிய வண்டு ஆசைப் படுகிறது தாயே!

உன் திருவடி சரணம்

# அருட்பாவிளக்கம்.

கவியோகி
சுத்தானந்தபாரதியார்

முற்றொடர்ச்சி

ஆகாசத்திலிருந்து மின்சாரம் இறங்காவிட்டால் இந்த பல்பில் ஒளி வருமா? மணியில் ஓசை வருமா? பிரிஜிடேரில் குளிர் வருமா? அடுப்பில் சூடுவருமா? எலெக்ட்ரான் அணுக்கள்விண்ணிற் சுழன்று வாராவிட்டால் உலகில் அணுசக்தி ஏது? வானொலியேது? இறைவனருள் இன்றேல் விண்ணேது மண்ணேது? இதை நன்றுயறிந்தே வள்ளலார் எல்லாம் வல்ல இறைவனையே வணங்கச் சொன்னார். தமது படத்தைக்கூடச் சத்திய ஞான சபையில் வைக்கச் சம்மதிக்கவில்லை.

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடும் கேளீர்
என்மார்க்கத்து எனை நுமக்குள் ஒருவன் எனக் கொள்ளீர்
எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போல வேறுசிலபுகன்றே
புத்திமயக் கடையாதீர்; பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவம் ஒன்றே
தன்னாணை என்னாணை சார்ந்தறிமின் ஈண்டே.........

என்று ஆணையிட்டுக் கூறினார். அந்த அருட்சாதனத்தைச் செய்யத் தமிழர் வருவார்களா? இன்றுலகம் வஞ்சமும் நஞ்சமும் போரும்போட்டிப்பொறாமைக்காடுமாயிருக்கிறதே. அணுகுண்டு பயத்தில் உயிர் நடுங்கிக்கொண்டிருக்கிறதே. இருள்வழியில் ஏங்கியலைகிறதே. இந்த உலகுக்கு வள்ளலாரின் அருள் நெறியையும் ஆன்ம நேயத்தையும் காட்ட வேண்டாமா? ஐயோ வள்ளலார் படித்துப்படித்துப் பாடினாரே

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையில்
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே ..........
நால்வருணம் ஆச்சிரமம் ஆசாரம் முதலாம்
நவின்றகலைச் சரிதமெல்லாம் பிள்ளைவிளையாட்டே



பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்
பவநெறி இதுவரைப் பரவியததனால்
செந்நெறி யறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறியருள் அடைந்திலர் ஆதலின் இனி நீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி என்னும் வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
தனிநட ராசஎன் சற்குருமணியே.........

என்ற நாயகன் வார்த்தை உங்கள்செவிக்கேறியதா? இந்த அருள் பொதுவேகத்தை அருட்பா உலகிற்பரப்ப இனியேனும் வருவீர்களா? தமிழர்களே வள்ளலாரை அறிவீர்களா? அவரே உலக ரக்ஷகர், கலியுக தீர்க்க தரிசி. அவருக்காக, அவரது அருட்சுடரைப்பரப்ப நான் நீண்டகாலம் தவநிலையில் இருந்தே, பேனாவை அசைத்தே. இன்று நாவைஅசைக்கிறேன். உங்கள் மனம் அசையுமா? இந்த வடலூரை உலகிற்குப் பொதுநிலையமாக்க என் ஆர்வம் துள்ளுகிறது. அருட்சக்தியும் துணைசெய்கிறது. உங்கள் உள்ளம் கரையுமா? இங்கே 250 ஏகரா நிலத்தில் ஒருபெரிய சுத்தசன்மார்க்க நிலையம் எழுகிறது: அதில் அருட்பா பாரதசக்தி தேவாரம் திருவாசகம் தாயுமானார், பைபிள் குரான் குறள் ஆகிய உலக அருள் நூல்களெல்லாம் சாதன முறையில் அன்பர் பயிலவேண்டும். அவர்கள் வாழ்வே யோகமாகவேண்டும். யோகப்பயிற்சியே மூச்சாகவேண்டும்.

அப்படி ஆயிரம் அருட்சோதி ஆன்ம நேயத்தொண்டர்களைப் பயிற்றுவோம். அவர்களைஉலகெங்கும் அனுப்புவோம். அருள்வேதத்தை ஆங்கிலத்திலும் பன்மொழியிலும் ஆக்குவோம். உலகெங்கும் தமிழகத்திலிருந்து அருள் ஒளி பரவசெய்வோம். இந்தப்பணிக்கு முதலில் 100 பேர்கள் வருவீர்களா? விவேகானந்தர் தலைமையில் உறுதிகொண்ட வாலிபர்கள் இன்று ராமகிருஷ்ண சங்கத்தை உலகெங்கும் நாட்டிப் பணிசெய்கிறார்களே அனிபெசண்டின் தியாசபிகல் சொசைடியை இங்கேசென்னையில் நாட்டி உலகெல்லாம் அதுமயமாக்கினாளே. எல்லாம் வள்ளலாருக்குப்பிறகு எழுந்தனவே. உள்ளம் உருகி உருகிப் பாடிய

வள்ளலாருக்குத் தமிழர் செய்ததென்ன? ஆண்டுதோறும் இங்கே கூடி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை போட்டுத் தீபதரிசனம் பார்த்தாற்போதுமா? அருட்பா கடல் கடந்துஒலிக்கவேண்டுமா? ஒரு பைபிளைக்கொண்டு கிறிஸ்துவப்பாதிரிகள் செய்யும் அற்புதங்களைக் காண்கிறீர்களே. அதுபோல் அருள்வேதத்தைக்கொண்டு நாம் ஏன் சர்வசமரஸத் தொண்டு செய்யலாகாது. பணக்காரர்களே பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்கிறீர்கள்? இனி பணத்தைப் பூட்டி வைக்க முடியாது........ வட்டி மேல் வட்டி வாங்கிப் பெட்டி மேல் பெட்டி நிரப்பிப் பண்ணாத தீமைகள் பண்ணிப் பகராதபொய்களைப்பேசி மானிட வாழ்வை வீணாக்குவீர்களா: இன்றேல் தமிழகத்தில் இங்கே அருட்சோதி ஆன்மநேய சுத்தசன்மார்க்க நிலையம் நாட்டி அருட்சித்தரைப் பயிற்றி உலகில் தமிழ்க்கலையும் அருட்கலையும் பரவச் செய்வீர்களா? செத்தவரை எழுப்பவந்த சித்தரை அறியுங்கள். அவர் புகழ் உலகெங்கும் பரவப்பணிசெய்யுங்கள். அந்தப் பணிக்கே உடல் பொருள் ஆவியெல்லாம் அர்ப்பணியுங்கள், வாருங்கள் முதலில் பத்துப்பேர்கள்...பத்து அருள் விளக்குகளை ஏற்றுவோம். அவை நூறு ஆகி, ஆயிரம் ஆகிப் பதினாயிரம் லட்சம் கோடி என்று விளங்கி உலகில் அருள்விளக்குகள் ஒளிரட்டும் இருள் நீங்கட்டும். இன்று உலகம் கொலைவழிச் சென்று மடிகிறது அன்பின் வழியது உயிர்நிலை என்பதைக் காட்டுவோம். .... வள்ளலார் அழைப்பை மறுமுறை நினைப்பூட்டி உங்களைத் தூண்டுகிறேன்;

நினைந்துநினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண் ணீர்அதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருள்அமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும்நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருணம் இதுவே-

தமிழர்காள், சிலகாலத்திற்கு முன் நான் மகாத்மா ராமலிங்கம் என்ற ஆங்கில நூல் வெளியிட்டேன், அதைப் படித்தஅமெரிக்கர் ஒருவர் இப்படிப்பட்ட மகாத்மாவை தமிழர்ஏன் உலகிற்கு விளக்கவில்லை. எங்கள் நாட்டில் பிறந்தால் இவரை உலகமகான்



ஆக்கியிருப்போமே என்றார்: அவருக்கு என்ன பதிற்சொல்லுவீர் அப்போது நான் பாடினேன்.

தினைத்துணையும் பேதமின்றிச் சீவகா ருண்யவழி சேர்ந்து வாழ
மனத்திருளை மாற்றிஅறி வானந்தத் துரியமலை வளநா டேற்றி
நினைத்திடவும் முடியாத நிலைக்குநமை அழைத்தானை நேரில்ஓர்நாள்
அனைத்துலகும் அறிவானைத் தமிழர் இனும் அறியானை அணிந்து
(வாழ்வாம்

இந்த ஈற்றடியைமாற்றி "அனைத்துலகும் அறிந்திடவே தமிழர் அறிந்திசைப்பானை அணிந்து வாழ்வோம்" என்று மாற்றியமைக்கச் செய்வீர்களா? உலகில் யாரும் சமரசம் பேசாமுன் வள்ளலார் உலக சமாசத்திற்கு வழிகாட்டினார்:

பலமதங்கள்ஒன்றெனவே வடக்கிருந்தும் மேற்கிருந்தும்பகருமுன்பே
நலமுயரும் தமிழகத்தில் அருளான்ம சமரஸத்தை நாட்டினானை
தலமுயரும் குருமணியை நவயுகத்து நபிமணியை இன்பம் ஓங்கி
உலகுயரும் தவமணியை உண்மையறி ஒளிமணியைப் போற்றி
(வாழ்வாம்

வள்ளற் பெருமான் ஈந்த அருட்பாவைச் சாதனம் செய்து உலகெல்லாம் அருட்குலம் ஓங்கும் வகையைப் பாரத சக்தியில் நன்றாக விளக்கினேன். அருட்பாவை பாராயணம் செய்வோம். கூட்டங்கூட்டமாகப் படிப்போம்,

ஊன் உருவி உயிர் உருவி உள்ளுருவிப் பாய்ந்தின்ப ஊற்றெடுக்கும்
தேனருவி யாகிவளர் தெய்வீகத் திருவருட்பா செய்த ஊற்றை
மானவர்க்குப் புதுவழியும் புதுயுகமும் புதுவாழ்வும் வழங்கியிங்கே
வானரசைக் கோணர்ந்தானைத் துரியவளநாட்டரசை வழுத்திநிற்பாம்

அன்பர்காள், வள்ளலார் பெயரால் அருட்பணி புரிவோம் வாருங்கள். ஆண்டவன் சக்திதருவான் மனந்திறந்து அன்புபெருகி வாருங்கள். இதோ வள்ளலார் தமிழரைத் தட்டியெழுப்பி ஆன்ம ஒருமைக்கு அழைக்கிறார்.

குன்றக்குடி அடிகளின்

# உபதேச மணிகள்:

[இருவாரங்கள் இலங்கையில் தங்கியபோது அவர் செய்த சொற்பொழிவுகளிலிருந்து தொகுக்கப்பட்டவை]

## மதங்களின் நோக்கம்

மக்களை விலங்கு நீர்மையிலிருந்து நீக்கி மனஉணர்ச்சியுடையவர்களாக வாழச்செய்வது மதம். அன்புள்ளம் உடையவனாக, அருள் உள்ளம் உடையவனாக, வாழவைக்கிறது மதம். இன்பத்தையும் அமைதியையும் தருகிறது மதம்.

(ஜிந்துப்பிட்டி)

## சைவத்தின் உயிர் நாடி அன்பு

சைவத்தின் மூலக்கருத்து, அதன் இலட்சியம் பிறஉயிர்களிடத்து அன்பு காட்டலே என்று சொல்லலாம். எனவே நமது வாழ்க்கையின் இலட்சியங்கள் பற்பல. அது ஒரு சில நற்சின்னங்களை

---

முற்பக்கத்தொடர்

பித்துலகர் பிதற்றுகின்ற மதவாதச் சூதுகளைப் பிறகிட் டோட்டிச்
சுத்தான்ம ஒருமையினில் உரிமையினில் உலகெல்லாம் துலங்கச் [செய்வோம்
அத்தனவன் அமைத்திதனை ஆற்றென்னில்ஆகாதசெயலும்உண்டோ
இத்தலத்தில் எங்கெங்கும் சன்மார்க்க நிலையங்கள் எழுப்புவோமே.

அருட்பெருஞ் சோதி! தனிப்பெருங்கருணை!

ஓம் சுத்த ஜோதி! ஓம் சத்ய சக்தி!.



மட்டும் அடக்கியுள்ளதல்ல. சைவம் அன்புக்கு உயிர்நாடி. தமிழ் மக்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள நாம் அத்தகைய அன்பை தலைவணங்கி வரவேற்க வேண்டும்.

(கொழும்பு)

## சைவமும்குறளும்.

பதி பசு பாசம், அல்லது இறை உயிர் தளை, என்றமூன்றையும் தெளிவாக விளக்குவது சைவசித்தாந்தம். அதனை சித்தத்தின் முடிவு எனலாம். அதில் அடங்கியுள்ள உண்மைகளையே திருவள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற"

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தருநோய்"

அருமையாகவும், அழகாகவும், ஆழமாகவும், அமைத்துள்ளார்.

—ஆனைப்பந்தி மட்டக்களப்பு.

## சைவத்தின் சமரசம்.

உலகத்தில் எல்லாச் சமயங்களும் முக்கியமானவையே. எனவேதான் திருஞானசம்பந்தசுவாமிகள், "வாழ்க அந்தணர்" என்னும் தேவாரத்தில் "ஆழ்க தீயது" எனக்கூறியுள்ளார். நாம் அதை நோக்குமிடத்து, சமயங்களிலுள்ள கெட்டவைகளைத்தான் வீழச்சொன்னாரே தவிர, சமயங்களை ஆழ்கஎன்று சொல்லவில்லை, என்பது நன்கு விளங்குகிறது. ஆகவே மறு சமயங்கள் வாழவேண்டும் என்பதற்காக நமது சமயத்தை நாம் விட்டுக்கொடுக்க வேண்டியதில்லை. சமயம் மக்களுக்கு அவசியம் என்பதை ஆங்கிலநாட்டு அறிஞர் ஷேக்ஸ்பியர் அவர்கள் வற்புறுத்தியிருப்பதில் இருந்தும் மதங்களின் அவசியம் விளங்குகின்றன.

—கொழும்பு

## கடவுளை இன்றுங்காணமுடியும்

தேவார திருவாசகம், முதலிய அருட்பாடல்களைப் பாடிய பெருமக்கள் கடவுளைக் கண்ணாரக்கண்டு இன்பம் எய்தியவர்கள் என்பது, அவர்களது பாடல்களைப்படித்துத் தெரிந்து கொள்ளலாம். மக்களாகப்பிறந்து, உணர்விற்சிறந்த உத்தமப்பெருவாழ்வு வாழ்ந்த - பெருமக்கள் பலர் கடவுளைக் கண்டிருக்கின்றனர், இன்னமும் காணமுடியும். கடவுளைக்காண்பது எளிது. ஆனால் அதற்கு நெஞ்சந்தோய்ந்த அன்பும், பக்தியும், சாதகமான வினை நீக்கமும் தேவை. பல நூல்களையும் படித்து சிந்தித்து நம்பிக்கை நிறைந்த உள்ளத்தை முதலில் பெற வேண்டும்.

—பம்பலப்பிட்டி

## திருவாசகம்

துன்பத்தைப் போக்கி, இன்பத்தைக்காட்டும் அறநெறிநூல்களில்சிறந்தது திருவாசகந்தான். அதில் மணிவாசகப்பெருமான் ஆண்டவனின் திருவருள் பற்றி நன்கு விபரித்திருக்கிறார். சுருக்கக்கூறின், அன்பு இபக்கம்தான் நமது மக்களிடையே வளர வேண்டும். இதைத்தான் நம் மணிவாசகப்பெருமானும் திருவாசகத்தில் சொல்லியிருக்கிறார்.

திருவாசகம் தேன் போன்றது. அது படிக்கப் படிக்க இன்பது தருவது. சுவை மிக்கது- அத்தகைய நூல் பிறசமயங்களில் இல்லை, என்று நான் துணிந்து சொல்ல ஆசைப்படுகிறேன். மற்றப் பாக்களில் இல்லாத ஓர் தனித்தன்மை இதில் உண்டு, அதைப்பாடுவதினால் நம் உள்ளம் தெளிவடைகிறது. தமிழ்ப்பெருமக்கள் அதைப் படித்துணர்ந்தால் நன்னிலைப்பேற்றை அடையலாம்.

—வெள்ளவத்தை



## பிரார்த்தனையின் அற்புதசக்தி

மனிதனை பகவானுடனும்; பேரின்பஉலகுடனும், பிணைக்கும் பொற்சங்கிலியே பிரார்த்தனை. பிரார்த்தனையினால் உள்ளம் தூய்மையடைந்து ஆத்ம சக்தி பெறுகிறது. இந்தியாவுக்குச் சுதந்திரத்தைதேட்டிக் கொடுக்க மகாத்மா காந்தியடிகள் இந்த ஆத்ம சக்தியையே முக்கிய ஆயுதமாகக்கொண்டிருந்தார்- நாடு நலம் பெறவேண்டுமானால், ஒவ்வொரு தனிமனிதனும் நல்லவனாகவேண்டும். அதற்கு ஆண்டவனை நினைந்து பிரார்த்தனை செய்யவேண்டும் பிரார்த்தனை அளவற்ற மகிமை உடையது. இறைவனை மலர்ப்பூசனைசெய்வதிலும், மனப்பூசனை செய்வது மேல்.

-திருக்கோணமலை

## நித்திய வழிபாடு.

சைவ மக்கள் தினசரி கோவிலுக்குப்போக முடியாவிடின் வாரமொரு முறையாவது செல்ல வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை மாலை வீட்டிற் குடும்பத்துடன் வழிபாடு செய்யவேண்டும் கூட்டு வழிபாடு வாரத்திற்கு ஒருமுறை நடத்தவேண்டும், இறவாத இன்பத்திற்கு இதுவே வழி.

(வவுனியா

## பரம வைத்தியர்

கேதீஸ்வரர் சிறந்த மருத்துவராகக் காட்சியளிக்கிறார். உடலைப் பற்றி நிற்கும் நோய்களோடு, பிறவிப்பிணியையும் மாற்றும் மருந்தாக இத்திருத்தலத்தில் இறைவன் காட்சியளிக்கின்றான், இதனை இளைஞர் உணர்ந்து அருள் நலங்கனிந்த திருமறைகளை ஓதி எல்லாநலமும் பெற்றவராக வாழவேண்டுமென்பதே எனது அவா.

(திருக்கேதீச்சரம்)

## இலக்கியங்களின் அருமை

குறுகிய சமயக் கண்ணோடு இலக்கிய நூல்களைக் கவனித்த காரணத்தால் பல அருமையான நூல்களை அறிந்து கொள்ளும் வாய்ப்புப் பலருக்குக் கிடைக்கவில்லை; சிறந்த இலக்கியங்கள் எந்தச் சமய வழிபாட்டுக்குள் புதைந்து கிடந்தாலும் எந்தத்தேசத்துக்குள் அடங்கிக்கிடந்தாலும் அவற்றின் இனிமையை அனுபவிக்கும் விரிந்த மனப்பான்மை மக்களிடம் ஏற்படவேண்டும்.

## திருக்குறளின்பெருமை

திருக்குறள் பொன்போன்றது, பொன் ஆழத்தோண்டி எடுக்கப்படும். ஆழத் தோண்டினாலும், மண்ணோடு கலந்து காணப்படுகிறது. மண் நீக்கி எடுத்தால் கொஞ்சந்தான் கிடைக்கிறது. ஆனால் பெறுமதிகூடியது. அதுபோலத்தான் குறளும், மிகவும் சொற்பமானது; ஆழ்ந்து படித்தால்தான் அதன் பொருளும் விளங்கும். வள்ளுவர் சுருக்கமாகச் சொல்லவந்தவர். கல்வியின்பின் கல்லாமையையும், நட்பின்பின் தீபநட்பையும், வைத்துப்பொருளை விளக்குகிறார். முதல் மூன்று அதிகாரங்கள் மின்சக்தி வாய்ந்தவை. திருக்குறளின் மறு பகுதிகளைப் படித்தபின்பே, இவற்றைப்படிக்கவேண்டும்.

— மட்டக்களப்பு

## தாய்மாரின் கலாசாரம்.

பெண்களாகிய ஒவ்வொருவரிடத்திலும் தாய்மையுள்ளம் பொருந்தியிருக்க வேண்டும். நல்லனவற்றைப் பாதுகாத்துக் கொடுக்கின்ற பொறுப்பு தாய்மாரிடத்து இருக்க வேண்டும். வாழ்க்கை முறையிலும் கலாசாரத்திலும் தாய்மார்க்குச் சிறந்த



இடமுண்டு. உங்கள் இல்லங்கள் தோறும் தேவார திருவாசகம் திருப்புகழ் கமழ்க!

மருதனமடம்

## சமய வாழ்க்கை வாழ்வதன் அவசியம்

உலகத்தொல்லைகட்கிடையே வாழ்ந்து, சமய அனுபவம்பெறுவது சிறந்ததாகும், அவ்வகையில் விளிப்படைந்த ஒரு மனிதன் பிறருக்கு ஆதரவளிக்கக் கூடியவனாயிருப்பான். நீங்கள் அனைவரும் சமய வாழ்க்கை நடத்தவேண்டுமென்றும் சமய அறிவைப் பெருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பருத்தித்துறை

## ஞானியும் உலகும்

ஞானிகளது கடமை உலகத்தைத் துறப்பது அல்ல, உலகை அறிவதே அவரது கடமை; வள்ளுவர் பெருந்தகையும் ஆணித்தரமாகக் கூறியுள்ளார், உலகத்தை வெறுக்கும் தன்மையல்ல- சிறந்த உலகை உருவாக்குவதே ஞானிகளின் கடமையாக அமையவேண்டும்.

## இளைஞர்கள் கடமை.

இன்றைய இளைஞன் நாளைய தலைவனானதால் இளைஞர்கள் தமிழை நன்றாகப் பயிலவேண்டும். வள்ளுவன் திரும்பவும் இம்மண்ணுலகிற்கு வருவாராகில் தாம் கண்டதமிழகம்— தாம் வாழ்ந்த தமிழ் நாடு இதுதானோ! என்று அதிசயப்படுவான்: இளைஞர்கள் குறளை மனமாரக்கற்று தமிழ் சேவைபூண்டு வீரத்தமிழர்களாக விளங்கவேண்டுமென்பதே எனது அவா.

—காங்கேசன்துறை

## நாவலரின் அரும்பணி

நாவலர் பெருமான் முதலிய சண்டமாருதப் பெருமக்கள் தமிழுக்கும், சைவத்திற்கும், செய்தசேவையை நாம்பாராட்டாதிருக்க முடியாது. அத்தனை பெருமக்கள் எண்ணிய சிந்தனைச் சுடர், சிவநெறிப் பற்றுடையோர்களின் கண்முன் நிற்கின்றது. திருஞானசம்பந்தப் பெரியார், திருப்பெருந்துறை மண்ணுக்கே வாழ்த்துக்கொடுத்திருக்கிறார். அது போலவே சைவமும், தமிழும், மணங்கமழும் இந்நாட்டினர்க்கு என் அளப்பரிய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

—யாழ்ப்பாணம்

## தமிழரும் சன்மார்க்கமும்

பழந்தமிழரின் ஓர் உயரிய பண்பாகும் சன்மார்க்கம், அவர்கள் அன்றாடவாழ்க்கையிலே கண்ட அறநெறியாகும். பல்வேறு வகையாலும் சிதறுண்டு போய்க்கிடக்கும் சமுதாயத்திற்கு, நல்ல மருந்து சன்மார்க்கமே. மனிதனை மனிதன் சமமாய் மதிப்பது தான் இன்றைய ஜனநாயகக் கொள்கை. ஆனால், பண்டைத்தமிழன் மற்றவனைக் கடவுளாக மதித்தான். அதாவது மனிதனுக்கு மனிதன் கடவுளுடைய மதிப்பைக்கொடுத்தான். இக் கொள்கையையடிப்படையாகக்கொண்டு சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்தை நமசமயவாழ்வில் மறுமலர்ச்சி உண்டாக்கிய நூலெனக்கருதுகிறோம். அதனைவிடச் சிறந்த வரலாறு நூல் தமிழனுக்கு எதுவுமில்லை.

—குரும்பசிட்டி

## சைவமும் தீண்டாமையும்

சைவத்தின் தீண்டாமைக்கு அறவே இடமில்லை. தீண்டாமையென்பது ஒரு சுயநலக்கூட்டத்தாரின் பிரசாரமேதவிர, அது சைவ நெறியல்ல- பிறப்பால் மாறுபாடு காட்டினால் நல்ல கொள்கை அழிந்து விடும். சிரஞ்சீவித்தன்மை வாய்ந்த மாணிக்கவாசகரின் திருவாக்கில் "சாதி குலப் பிறப்பென்னும் சுழல்பட்டுத் தடுமாறுதீர்கள்" என்று அவர் எச்சரிக்கிறார்.

—பருத்தித்துறை



# நல்ல தன்மையோடு வல்லமையும் சேரவேண்டும்.

(மு, வரதராஜன்)

நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது. வல்லவனாகவும் இருக்கவேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்லதன்மைமட்டும் உடையவர்கள் எத்தனையோபேர் கலங்கிக் கண்ணீர் வடித்துமாய்ந்திருக்கின்றார்கள், மாய்ந்து வருகின்றார்கள்: வல்லமை மட்டும்

204-ம்பக்கத்தொடர்ச்சி

அற்புதசக்தி அவரது பேச்சில் அழகாய் அமைந்துள்ளது,
மட்டக்களப்பில் அன்பர் திரு மு; சுப்பராமன் விடுத்தகேள்விகளுக்கு அடிகள் கொடுத்தபதில் ஆணித்தரமானவை: அவரது அறிவின் ஆழத்தையும் தெளிவையும் புலப்படுத்த அவையே போதிய சான்றாகும். அடுத்தமாத "ஆத்மஜோதி"யில் அவை இடம்பெறும். இந்த மலரில் அவரின் சொற்பொழிவுகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட சில மணிகளை மாத்திரம்வெளியிடுகின்றோம். மங்கையர்க்கரசியாரின் குருபக்தியை விளக்கும் கட்டுரையுடன் ஆரம்பிக்கும் இந்தமலர், அன்னாரைப்போல் அடக்கம், ஆர்வம்: அடியார் அன்பு; குருபக்தி முதலாய குணங்களில் இன்று தமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கும் குன்றக்குடி மகா சந்நிதானம் அவர்களின் முகப்பொலிவுடன் வெளிவருதல் சாலவும் பொருத்தமுடையது. திருக்களிற்றுப் படியாருடன் தொடங்கிய இக் கட்டுரையும் அடிகளின் வாழ்வின் லட்சியத்திற்குப் பொருத்தமான அதே நூலிலுள்ள, பிறிதோர் பாடலுடன் முடிவடையட்டும்:

அன்பேயேன் அன்பேயேன் றன்பால் அழுதரற்றி
அன்பேயன் பாக அறிவழியும்---அன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள் செய்யுமவை
சாற்றும் பழமன்றேதான்

பெற்றவர்களும் எதிர்பாராத வகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள்வரையில் இதற்குச்சான்றுகள் காணலாம். தமிழர்கள் நல்லவர்களாகமட்டும் இருந்துதனித்தனியாகவும் குடும்பம் குடும்பமாகவும் நாடு நாடாகவும் அழிந்தது போதும் இனிமேல் வல்லவர்களாகவும் வாழக்கற்றுக் கொள்ள வேண்டும், நல்லதன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழ வேண்டும்.

இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப்பகுதிகளில் ஒன்றைமட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலைமட்டும் போற்றி உரமாகவைத்திருப்பவனும் அழிகிறான். அவனுடைய உள்ளம் அவனுக்குப் பகையாகி அவனைத்தீயவழியில் செலுத்திக்கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனும் இடை நடுவே அல்லற்படுகிறான்; அவனுடைய உடல் பல நோய்க்கிருமிகளுக்கு இடம் கொடுத்து அல்லற்படுகிறது. உடலும்வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயரவேண்டியதாக இருக்கலாம், ஆனால் தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழமுடியாது; வானைப்புறக்கணித்துக்கிளைகளை உயர்த்தாமல் வாழவும் முடியாது. இந்த உண்மையை நன்றாக உணர்ந்தவர் திருவள்ளுவர். அறநெறியும் வேண்டும். பொருள்வளமும் வேண்டும், இன்பவாழ்வும் வேண்டும் என்று உணர்த்தும் நூல் திருக்குறள் தானே? அறத்தை நினைந்து பொருளைமறக்கும்படியாகத் திருவள்ளுவர் கூறவில்லை பொருளையோ இன்பத்தையோபோற்றி அறத்தை மறக்கும்படியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. பொருளையோ இன்பத்தையோ போற்றி அறத்தை மறக்கும்படியாகவும் அப்பெருந்தகை கூறவில்லை. உலகத்து நூல்களில் பல அறம் பொருள் இன்பம் மூன்றில் ஒவ்வொன்றை மட்டுமே வலியுறுத்தியிருப்பதைக் காணலாம். வாழ்க்கையின் பலபகுதிகளையும் போற்றிவாழவேண்டும் என்பதை உணர்த்த வந்ததிருவள்ளுவர் இந்த மூன்றையும் தெளிவுறுத்தியுள்ளார். தமிழராகிய நாம் திருவள்ளுவரைப் பெற்றிருக்கிறோம், திருக்குறளைப்பெற்றிருக்கிறோம். ஆனால் திருவள்ளுவர் கூறியபடிவாழவில்லை, நல்லதன்மை தேடுகிறோம்; வல்லமைதேடவில்லை; அதனால்தான் தாழ்வுறுகிறோம்.

---



# குரு சந்நிதானம் வாழ்க!

குன்றுத் தனிவேல் விழிச்சுடரால்;
கொடிய அகந்தை அசுரகுணக்
குன்றைப் பிளந்து, அமரகுலக்
கொடியை மணந்து பேரின்பக்
குன்றைக் குடியாய்க் கொண்டதமிழ்க்
குமரன் அருளால் தழைத்தோங்கும்
குன்றக் குடியை ஆள் சுகுணக்
குன்றே வணக்கம் நின்னடிக்கே!

என்றும் அன்பாய்ப் புவிவாழ
இனிய நால்வர் வளர்த்துவிட்ட
குன்றாச் சைவப் பெருநெறியைக்
குலைக்கத் துடிக்கும் நாத்திகப்பேய்க்
குன்றைத் தகர்த்து சைவமணிக்
கொடியை வளர்க்கத் திடமுடனே
குன்றக் குடியில் எழுந்ததவக்
கொழுந்தே! வணக்கம் நின்கழற்கே!

இருட்புன் னெறிக்குட் பட்டழியும்
இந்நாள் உலகம் உய்வதற்கு
அருட்பொன் னெறிநற் கழகமொன்று
அமைத்துக் கொடுத்து அருள்பரப்பும்
திருவண் ணாமலை தனைச்சேர்ந்த
செழுங்குன் றக்குடி ஆதீன
அருணா சலதே சிகபரம
ஆசா ரியசுவா மிகள்வணக்கம்.

வயதிற் சிறியாய் எனினும், உயர்
மாண்பிற் பெரியோய்! நீ என்றும்
அயரா தேழை எளியவர்தம்
அல்லல் போக்க விரைந்தோடிச்
செயலால், மொழியால் சிந்தனையால்
செயுநற் றொண்டு கண்டுமிக
வியந்தோம் இனித்தான் சமயஒளி
விளங்கும் எனக்கண் டுளமகிழ்ந்தோம்

ஆதீ னத்தின் தலைவரேனில்
ஆடம் பரத்தின் உறைவிடமென்(று)
ஓதும் மொழிகள் பொய்யாக,
உண்மை எளிமை மனத்துறவு
சாதி சமய பேதமின்றித்
தழைக்கும் அன்பு தமிழுணர்வால்
கோதில் தொண்டு புரிந்துவரும்
குருசந் நிதானம் வாழ்கவே

சித்தாந் தத்தின் கரைகண்டு
தெழிந்த ஞான தேசிக! நற்
பக்திக் கனலிற் கசிந்துருகிப்
பரம பதத்தேன் பருகுபவ!
தித்தித் திடுசெந் தமிழ்க்கடலில்
திளைத்துக் களிக்கும் செழும்புலவ!
எத்திக் கிலுநற் புகழ்பரப்பி
என்றென் றும்நீ வாழியவே!

"பரம ஹம்ஸதாஸன்"



# திருவள்ளுவர்
# அர்ச்சனைமாலை.

[க. இராமச்சந்திரன்]

தெய்வப் புலமைத் திருவள் ளுவராம்
மெய்வைத்த வேத விளக்கே போற்றி!
உருவெழில் நான்முகன் நாயனார் தேவர்
மருமுதற் பாவலர் மாதானு பங்கி
பெருநா வலரெனும் பெயர்நவந் தாங்கி
குருவுரு வாய்வந்த குணக்கடல் போற்றி!
புத்தர் தோன்றிய புனிதநா ளைத்தொடர்
உத்தம அனுடத் துதித்தனை போற்றி!
மாசறு கற்பின் வாசுகி யோடு
இல்லற மாகிய நல்லறம் பேணி
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்ததன் பின்னர்
தெய்வநிலை பெற்ற தேவே போற்றி!
பொய்யா மொழியாய் பொதுமறை தானாய்,
பெருந்தெய்வ நூலாய் வாயுறை வாழ்த்தாய்
உன்னைப் போலவே ஒன்பது நாமங்கொள்
உத்தர வேதத்தை உதவினை போற்றி!
சாதிமத பேதம் சற்றேனு மின்றி
சன்மார்க்க சாதனம் சாற்றுங் குறளை
மன்னுல குய்ய மலர்ந்தனை போற்றி!
இனிய தமிழ்மொழி இலக்கிய மனைத்தின்
உரைகல் லாயதை உரைத்தனை போற்றி!
எந்தாய் மொழியின் இறவாப் பெருமைக்கு
அதனையே சான்றாய் அமைத்தனை போற்றி!
தமிழர்கள் கண்ட அகப்புற வாழ்வின்
விளக்கமும் அதுவென விளக்கினை போற்றி!
கடவுளைப் பணிதலே கற்றதன் பயனென

நடந்து காட்டி நயந்தனை போற்றி!
பற்றிலாப் பரமன் பதத்தினைப் பற்றலால்!
பற்றுகள் அறுமெனப் பகர்ந்தனை போற்றி!
வெற்றி தோல்வி விருப்பு வெறுப்பு
வெம்மை தண்மை வீடு பிறப்பு
இன்ப துன்பம் இருமை வகைதெரிந்து
ஈண்டறம் பூண்ட இனத்தின் பெருமை
உலகில் உயர்ந்ததென் றுரைத்தனை போற்றி!
மனத்துக்கண் மாசிலன் ஆதல்அனைத்தறன்
மற்றவை பகட்டென மலர்ந்தனை போற்றி!
அவாவை அறுத்தால் அற்றது பிறவியென்
றுருயிர்க் கருநெறி அருளினை போற்றி!
வேண்டாமை போன்ற விழுப்பொருள் வேறு
ஈண்டில்லை யென்று இயம்பினை போற்றி!
ஒழுக்கந் தன்னை உயிரினும் ஓம்பல்
விழுப்பந் தருமென விளக்கினை போற்றி!
வாய்மையே அறத்தின் தாயகமென்று
வாழ்வுக் குய்நெறி வழங்கினை போற்றி!
இன்னா செய்தார்க்கும் இனியவை செய்தலே
சான்றோர் குணமெனச் சாற்றினை போற்றி
கற்பன வெல்லாம் கசடறக் கற்றபின்
நிற்குக அதற்குத் தக்கவா றென்ற
அற்புத வாக்கியம் அருளினை போற்றி!
யானென தென்னுஞ் செருக்கிலா ஒருவனை
வானோரும் வாழ்த்துவர் என்றனை போற்றி!
பண்பொடு வாழ்ந்தால் மன்பதை முழுதும்
அன்பொடு மதிக்குமென் றறைந்தனை போற்றி!
கண்கருத் தொத்த காதலின் சிறப்பை
எண்ணரும் முறையில் இயம்பினை போற்றி!
அறநெறி ஒழுகும் இல்லறத் தார்க்கு



பிறநெறி வேண்டாமென் றுரைத்தனை போற்றி!
மங்கல மாக மாந்தர்வாழ் வமையவும்
செங்கோ லாட்சி செழிப்புற் றோங்கவும்
எக்காலத்திற்கும் பொருந்திடும் தன்மையில்
எந்நாட் டினரும் ஏற்கும் முறையில்
அரசியல் இலக்கணம் அமைத்தனை போற்றி!
அன்பே இன்பம், அன்பே உயிர்நிலை;
அன்பிலா ரெல்லாம் தோலினாற் போர்த்த
என்புபோல் வாரென் றியம்பினை போற்றி!
நெஞ்சத் துறவிலா வஞ்சத் துறவால்
எஞ்சுவ திழுக்கென் றியம்பினை போற்றி!
சமணம் பௌத்தம் சைவம் முதலாம்
எம்மதத் தினர்க்கும் சம்மதமாக
நான்மறைச் சாரம் நவின்றனை போற்றி!
இன்பமே தானும் இறையே போற்றி!
அன்பிற் குறைவிடம் ஆனாய் போற்றி!
அறத்திற் கனியாய் அமைந்தாய் போற்றி!
பொறுமைக் குதாரணம் ஆனாய் போற்றி!
துறவே வடிவாய்த் துலங்கினாய் போற்றி!
முப்பால் அருளிய முனிவனே போற்றி!
ஒப்புயர் வில்லாப் புலவனே போற்றி!
ஆரணம் அருளிய அண்ணலே போற்றி!
பூரண போற்றி! புண்ணிய போற்றி!
போற்றி! வள்ளுவ! நின் பூங்கழல் போற்றி!
போற்றி! போற்றி! நின் திருக்குறள் போற்றி!

# செய்தித்திரட்டு

## கூட்டுப்பிரார்த்தனை

மஞ்சக்தொடுவாய் ஆலயடிச் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் 12-6-53ல் நேருஜீ கைப்பந்தாட்டச் சங்கத்தினரால் கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஒவ்வொர் வாரமும் தொடர்ந்து நடாத்த ஒழுங்குசெய்யப்பட்டுளது.

## திருவள்ளுவர் தினம்.

28-5-53 வியாழக்கிழமை பி—ப 4 மணியளவில்
சாஸ்திரி கூழாங்குளம்
ஸ்ரீ சச்சிதானந்த வாசிகசாலையில்
டி தினம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.
அத்தருணம் பலபெருமக்கள் சொற்பொழிவாற்றினர்.

## மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் குருபீட இளவரசு அபிஷேகவிழா

டிவிழா 28-5-53ல். திருவருளால் இனிது நிறைவேறிற்று, இளவரசாக அபிஷேகம் செய்யப்பட்ட அடிகளாருக்கு

திருவருள் தவயோகி சோமசுந்தர தேசிகபரமாசாரியர்

---

என்னும் தீக்ஷாநாமம் மகாசந்நிதானம் அவர்களால் வழங்கப்பெற்றது.

---

150 New Chetty Street,
Colombo 13 ........ 1953

## ஒரு விண்ணப்பம்

செந்தமிழ்ச் செல்வரீர்!

மணிவாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தேனும் திருவாசகம் பொதுவாகக் கலையுலகத்திற்கும் சிறப்பாக தமிழுலகத்திற்குஞ் சைவ உலகத்திற்கும் உயர்வளித்து வரும் பெற்றியது என்பது எல்லாரும் அறிந்ததொன்றே. அத்தகைய நூலுக்குப் பலவுரை பயின்றுவரினும் ஏற்றதோர் உரைவகுக்க வேண்டும் என்ற பேரவா பலவருஷங்களாக எமது மாமனர் பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களிடம் குடிகொண்டிருந்தது. எனினும் உடல் நலமின்மை முதலிய பல காரணங்களால் தாமே தனித்து அதனைச்செய்ய இயலாமையின் எழுத்தாளரும் வேறு உதவிகளும் வேண்டப்படுவனவாயின. ஈதொன்றே குறிக்கோளாக தமது வாழ்க்கை நலன்களைப்பேணுது ஏறக்காழ ஆறுவருஷங்களாக அல்லும் பகலும் அரிதின் முயன்று எழுதியபேருரை இப்போதுதான் இறையருளால் நிறைவேறியுள்ளது. இதன் பொருட்டாக இதுகாறும் ரூபா ஆறுயிரத்துக்குமேல் செலவாகியது.

நிறைவேறிய அவ்வுரையை அச்சேற்றினன்றே அது எல்லோர்க்கும் பயன்படும்: எம்மாமனரின் தளர்ந்த உடல்நிலைமையைக் கருதி தமிழன்பர் உதவியை நாடி அச்சிட முன்வந்தேன். இதுவரை சிவபுராணம் நிறைவேறியதோடு அச்சுவேலையுந்தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்நூல் முழுதும் நிறைவேற ஏறக்காழ 1000 பக்கங்களாவது ஆகும். இதற்குப்பெருந்தொகை தேவையாகும் என்பது நாம் விரிந்து கூறவேண்டியதில்லை.

இவ்வுரை பல அறிஞராலும் பத்திரிகைகளாலும் நன்கு பாராட்டப்பட்டுவருகின்றது.

இன்னோரன்னவற்றை மனங்கொண்டு பேருதவிசெய்வோர்க்கும், முற்பணமாக ரூபா 12-00 உதவுவோர்க்கும் நூல் அச்சேறியவுடன் பிரதி ஒன்று அனுப்பிவைக்கப்படும். அம்மட்டன்றி தங்கள் நண்பர்களையும் இத்துறையில் முயன்றுதவும் வண்ணம் ஊக்கிப்பெருவள்ளன்மை பூண்டவர்களாகுக

இங்ஙனம் தங்கள் நன்றிமறவாத,

கு. பூர்ணனந்தா
(உரையாசிரியருக்காக)

# விளம்பரங்கள்

Regd at the G-P-O
as a News Paper H-C 59/300


## திருக்குறள் வகுப்பு.

ரத்தினதாட்டை

திருக்குறள் மன்றத்தில் சனிக்கிழமை தோறும்
முற்பகல் மணி 8 முதல் 9 வரை
திருக்குறள் வகுப்பு நடைபெறும்.

ஆசான். **சு. திருஞானம்**

ஆர்வமுள்ள அனைவரும் கலந்துகொள்ளலாம்.

---

## சரவண எழுத்துப் படங்கள்

### ஷத்கோண சண்முகப் பிரகாசபடம்

இவ்விரு படங்களும் 20/14 சைஸ்
12 வர்ணங்கள் கொண்ட அழகிய முறையில் வெளிவந்துள்ளன,
இந்துக்கள் ஒவ்வொருவரதும் பூசை அறைகளிலும் வைப்பதற்கு
சிறந்தது. சித்திரவிளக்கப் புத்தகங்களுடன் கூடியது,
படம் ஒன்று 1 ரூபா 8 அணா.

கிடைக்குமிடம்:-

பாலதண்டபாணி பிக்சர் கவுஸ்
குமாரவீதி திருப்பூர் [டி-ஜு-எஸ்]

---

## இந்துமத பால பாடம்,

ஆசிரியர் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

நாகர்கோயில்

கிடைக்குமிடம்- ஏ, என். நாச்சிமுத்துப்பிள்ளை
சதாசிவ டைப் ஆபீஸ் 5/23. முன்சிப்கோர்ட சந்து
விலை ரூபா 1, கோயமுத்தூர் [எஸ்-ஜு.]


---

☞ சரவண அச்சகம். - நாவலப்பிட்டி ☜